ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1905/36 - 2015 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2015.03.13

*1905/36 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 11/81.*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2015, சனவரி 28.*

**ஒழுங்குவிதிகள்**

*1. இவ்வொழுங்குவிதிகள் 2014 ஆம் ஆண்டு உணவு (இனிப்பூட்டிகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*2. ஆளெவரும் குழந்தை அல்லது இளம் சிறுவர்களுக்கான விசேடமாக தயாரிக்கப்படும் ஏதேனும் உணவில் அல்லது உணவின் மீது ஏதேனும் இனிப்பூட்டியைப் பயன்படுத்தலாகாது.*

*3. (1) ஆளெவரும், இதற்கான அட்டவணை I இன் II ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் இனிப்பூட்டி தவிரந்த ஏதேனும் இனிப்பூட்டியை இறக்குமதி செய்தலோ, விற்பனை செய்தலோ, களஞ்சியப்படுத்துதலோ, விநியோகித்தலோ, ஏற்றிச் செல்லுதலோ, பயன்படுத்துதலோ, விற்பனைக்கென வெளிக்காட்டி வைத்தலோ அல்லது விளம்பரப்படுத்துதலோ ஆகாது.*

*(2) ஆளெவரும் இதற்கான அட்டவணை I இன் III ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் அனுமதிக்கப்படும் இனிப்பூட்டியின் அட்டவணையின் I இன் IV ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் ஆகக்கூடிய பயன்படுத்தக்கூடிய அளவிற்கு மேலதிகமாக ஏதேனும் உணவில் அல்லது உணவின் மீது பயன்படுத்துதலாகாது.*

*4. ஒன்றுக்கு மேற்பட்ட அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகளின் ஒன்றினைப்பிலான ஏதேனும் உணவு கலவையொன்றைக் கொண்டிருப்பின், அவற்றின் மொத்த சதவீதங்கள் நூறை விஞ்சவில்லை என ஒவ்வொரு ஆளும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.*

இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கு, அத்தகைய உணவில் காணப்படும் அத்தகைய இனிப்பூட்டியின் ஒவ்வொன்றினதும் அளவானது, அவ்வுட்பிரிவிற்கு தோதான அவ்வினிப்பூட்டியின் அதிககூடிய அளவின் சதவீதமொன்றாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

5. ஏதேனும் உணவில் அல்லது உணவின் மீது அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி அல்லது அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகளின் ஒன்றிணைவு இருக்குமிடத்து, பின்வருமாறு அத்தகைய உணவு அடங்கியுள்ள பொதியின் சுட்டுத்துண்டின் மீது எழுதப்படுதல் வேண்டும்.

(அ) “அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் “X” மற்றும் “Y” உள்ளடங்கியுள்ளது” என்னும் விபரணமொன்று அத்துடன் அத்தகைய உணவில் அல்லது உணவின் மீது பயன்படுத்தப்படும் ஏதேனும் அனுமதிக்கப்படும் இனிப்பூட்டிகளின் பெயரான “X” மற்றும் “Y” என்னும் எழுத்திற்குப் பதிலிடப்படுதல் ;

(ஆ) பொலியோல்ஸ் (சேபிட்டோல், க்சைலிட்டோல்ஸ், லக்டிட்டோல், மணிடோல், மல்ரிரோல், எரித்திரிரோல்) அல்லது ஐசோமோல்ட் அடங்கியுள்ள போது “அதிகளவு நுகர்வு மலமிளக்கி விளைவுகளைத் தூண்டலாம்” என்றவொரு எச்சரிக்கை ; அத்துடன்

(இ) அஸ்பாட்ரேம் அடங்கியுள்ள போது “பெனல்கிட்டோறியுறிக்ஸ் உள்ளவர்களினால் பயன்படுத்தப்படுதலாகாது” அத்துடன் “சிறுவர்களுக்கு சிபாரிசு செய்யப்படவில்லை” என்றவொரு எச்சரிக்கை.

6. ஐந்தாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்படும் எச்சரிக்கை அல்லது விபரணம் தெளிவானதும் வாசிக்கக்கூடியதுமான முறையொன்றில் எழுதப்படுதல் வேண்டுமென்பதுடன் வேறேதேனும் எழுத்திலான அல்லது படத்திலான விடயத்தினால் மறைக்கப்படுதலோ, தடுக்கப்படுதலோ அல்லது இடையீடு செய்யப்படுதலோ ஆகாது.

7. (1) இதற்கான அட்டவணை I இன் IV ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் அதிககூடிய பயன்படுத்தக்கூடிய அளவு பயன்படுத்துதவற்கான ஏதேனும் அறிவுறுத்தலுக்கிணங்க தயாரிக்கப்பட்டதும் உண்ணத் தயாரானதுமான அவ்வுணவின் கிலோகிராம் ஒன்றிற்காக அனுமதிக்கப்படும் இனிப்பூட்டியின் மில்லிகிராமின் அதிககூடிய தொகையாதல் வேண்டும்.

(2) பொலியோல்ஸ் (சேபிட்டோல், க்சைலிட்டோல்ஸ், லக்டிட்டோல், மணிடோல், மல்ரிரோல், எரித்திரிரோல்) இசோமோல்ற் என்பவற்றின் பயன்படுத்திக்கூடிய அதிககூடிய அளவு, எண்ணப்படும் நோக்கத்தை எய்துவதற்கு அவசியமாக இருக்கக்கூடியதிலும் அதிகமாக இல்லாத ஒரு மட்டத்தில் நல்ல உற்பத்தி பழக்கத்திற்கிணங்க இருத்தல் வேண்டும்.

8. அனுமதிக்கப்பட்ட ஸ்ரிவியொல் கிளிக்கோசையிட் பிரித்தெடுத்த பகுதிகள் இதற்கான அட்டவணை II இன் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் பதார்த்தங்களில் இருத்தல் வேண்டுமென்பதுடன் மாற்றுதல் காரணி அட்டவணையின் II இன் நேரொத்த பதிவில் II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

9. ஸ்ரிவியோல் கிளிக்கோசைட் ஒன்றிற்கு சமமான ஸ்ரிவியோலினது கணிப்பு இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

10. 2004 சனவரி 12 ஆந் திகதிய 1323/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் உணவு (இனிப்பூட்டிகள்) ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

11. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலொழிய –

“சிறுவர்” என்பது, பன்னிரெண்டு வயதிற்கு குறைந்த எவரேனும் ஆள் என பொருள்படும் ;

“சக்தி குறைக்கப்பட்ட” என்பது, எந்த உணவிற்கு மூலத் தயாரிப்புடன் அல்லது அது போன்ற தயாரிப்புடன் ஒப்பிடும் போது முப்பது சதவீதத்தினால் சக்தியின் பெறுமதி குறைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பீடு செய்யப்படும் உணவுப் பொருள் எனப் பொருள்படும் ;

“உணவு” 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டதாகும் ;

“குழந்தை” என்பது, பன்னிரெண்டு மாதங்களுக்கு குறைவான வயதையுடைய பிள்ளை எனப் பொருள்படும் ;

“இனிப்பூட்டி” என்பது, இனிப்புச் சுவை அல்லது உணவு மீதான இனிப்புச் சுவையொன்றாக பங்களிக்க பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்பட எண்ணப்படும் ஏதேனும் உணவுச் சேர்ப்பு எனப் பொருள்படும் அது காபோவைதரேட் சீனியை உள்ளடக்காது ;

"சீனி சேர்க்கப்படாதது" என்பது, பின்வருவனவற்றின் எவற்றையேனும் கொண்டிராததெனக் குறிப்பீடு செய்யப்படும் உணவு எனப்பொருள்படும்.

(i) சேர்க்கப்பட்ட மொனொ சச்சிரேட்ஸ் ;

(ii) சேர்க்கப்பட்ட டை சச்சிரேட்ஸ் ;

(iii) அதனது இனிப்பூட்டிகளாக சேர்க்கப்படும் வேறு உணவு பதார்த்தங்கள் ;

"உணவு மீதான இனிப்பூட்டி" என்பது, சக்கரினும் அதனது சோடியம், பொற்றாசியம், கல்சியம் உப்புகளும், அஸ்பாட்ரேம், அசிசல்பேம் கே, சுக்கிரலோஸ் மற்றும் நியோரடேம், ஸ்டீவியோல் கிளைகோசைட் ; அத்துடன்

"இளம் சிறுவர்" என்பது, ஒரு வயதிற்கும் மூன்று வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் எனப்பொருள்படும்.

**அட்டவணை I**

(ஒழுங்குவிதிகள் 3 (1), 3 (2))

| இல. | நிரல் I<br>ஐ. என். எஸ். | நிரல் II<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | நிரல் IV<br>பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | **சாப்பாட்டின் பின் உணவுகளும் அவற்றை ஒத்த உணவுகளும்** | | | |
| 1.<br><br>2.<br>3.<br>4.<br><br>5.<br>6.<br>7. | 420<br><br>421<br>953<br>965<br><br>966<br>967<br>968 | சோபிட்டோல்<br>சோபிட்டோல் சிரப்<br>மன்னிட்டோல்<br>ஐசமோல்ட்<br>மல்டிடோல்<br>மல்டிடோல் சிரப்<br>லக்டிடோல்<br>சைலிடோல்<br>எரித்றிடோல் | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட சாப்பாட்டின் பின் உணவு - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது.<br>2. பாலும் பாலிலிருந்து பெறப்பட்டவற்றை அடிப் படையாகக் கொண்ட தயாரிப்புகள் - சக்தி குறைக் கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>3. பழங்களையும் மரக்கறிகளையும் அடிப்படையாகக் கொண்ட சாப்பாட்டின் பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>4. முட்டையை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>5. தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>6. காலை உணவு தானியங்கள் அல்லது தானியத்தை அடிப்படையாக கொண்ட தயாரிப்புகள் - சக்தி குறைக் கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>7. கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க் கப்படாதது<br>8. உண்ணத்தகு ஐஸ் வகை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>9. ஜாம், ஜெலி மற்றும் மாமலேட்ஸ் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>10. பழத் தயாரிப்புகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது, பழத்தை அடிப்படையாக கொண்ட குடிபானங்களின் உற்பத்திக்காக கருதப் பட்டவை தவிர. | ஜிஎம்பி யினால் வரையறுக்கப்பட்டது. |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

(ஒழுங்குவிதிகள் 3(1), 3 (2)

| இல. | நிரல் I<br>ஐ. என். எஸ். | நிரல் II<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | நிரல் IV<br>பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | | **இனிப்புப் பண்டம்** | | |
| 8.<br><br>9.<br>10.<br>11.<br><br>12.<br>13.<br>14. | 420<br><br>421<br>953<br>965<br><br>966<br>967<br>968 | சோபிட்டோல்<br>சோபிட்டோல் சிரப்<br>மன்னிட்டோல்<br>ஐசமோல்ட்<br>மல்டிடோல்<br>மல்டிடோல் சிரப்<br>லக்டிடோல்<br>சைலிடோல்<br>எரித்றிடோல் | 1. சீனி சேர்க்கப்படாத இனிப்பு பண்டம்<br>2. உலர்ந்த பழங்களை அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>3. மாப்பொருளை அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது<br>4. சீனி சேர்க்கப்படாத சுவிங்கம்<br>5. கொக்கோ, பால், உலர்ந்த பழம் அல்லது கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சன்விச் தடவுபசை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | ஜிஎம்பி யினால் வரையறுக்கப்பட்டது. |
| | | **நானாவித உணவு** | | |
| 15.<br><br>16.<br>17.<br>18.<br><br>19.<br>20.<br>21. | 420<br><br>421<br>953<br>965<br><br>966<br>967<br>968 | சோபிட்டோல்<br>சோபிட்டோல் சிரப்<br>மன்னிட்டோல்<br>ஐசமோல்ட்<br>மல்டிடோல்<br>மல்டிடோல் சிரப்<br>லக்டிடோல்<br>சைலிடோல்<br>எரித்றிடோல் | 1. கொக்கோவை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>2. சோஸ்<br>3. மஸ்டட் கிறீம் (கடுகு கிறீம்)<br>4. மென்மையான பேக்கறி உற்பத்திகள் - சக்தி குறைக்கப் பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>5. குறிப்பிட்ட போசனைப் பாவனைக்கெனகருதப்பட்ட உற்பத்திகள்<br>6. திண்ம குறை நிரப்புணவுகள் | ஜிஎம்பி யினால் வரையறுக்கப்பட்டது. |
| | | **மதுசாரமற்ற பானங்கள்** | | |
| 22. | 961 | நியோடேம் | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட பானங்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>2. பாலும் பாலிலிருந்து பெறப்பட்டவற்றை அடிப்படை யாகக் கொண்ட தயாரிப்புக்கள் அல்லது பழச்சாற்றை அடிப்படையாகக் கொண்ட பானங்கள் - சக்தி குறைக்கப் பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 20 மி. கி. /லீற்றர்<br><br>20 மி. கி. /லீற்றர் |
| | | **சாப்பாட்டின்பின் உணவுகளும் அவற்றை ஒத்த உணவுகளும்** | | |
| 23. | 961 | நியோடேம் | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட பானங்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது<br>2. பாலும் பாலிலிருந்து பெறப்பட்டவற்றை அடிப்படை யாகக் கொண்ட தயாரிப்புக்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 32 மி. கி. /கி. கி.<br><br>32 மி. கி./கி. கி |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

*(ஒழுங்குவிதிகள் 3 (1) , 3 (2)*

| *இல.* | *நிரல் I*<br>*ஐ. என். எஸ்.* | *நிரல் II*<br>*அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி* | *நிரல் III*<br>*அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள்* | *நிரல் IV*<br>*பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு* |
|---|---|---|---|---|
| | | | 3. பழங்களையும் மரக்கறிகளையும் அடிப்படையாகக் கொண்ட சாப்பாட்டின் பின் உணவுகள் - சக்தி குறைக் கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 32 மி. கி./கி. கி |
| | | | 4. முட்டையை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க் படாதது | 32 மி. கி. /கி. கி |
| | | | 5. தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 32 மி. கி./கி. கி |
| | | | 6. 15 சதவீதத்திற்கு (%) மேலான நார்ப்பொருளையும் 20 சதவீத (%) தவிட்டையும் கொண்டுள்ள காலை உண வுத் தானியங்கள் - சக்தி குறைக்கப்பட்டது சீனி சேர்க்கப் படாதது | 32 மி. கி/கி. கி |
| | | | 7. கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது | 32 மி. கி/கி. கி. |
| | | | இனிப்புப் பண்டங்கள் | |
| *24.* | *961* | நியோடேம் | 1. சீனி சேர்க்கப்படாத இனிப்புப் பண்டங்கள் | 32 மி. கி/கி. கி. |
| | | | 2. சுவாசத்திற்கு புத்துணர்வளிக்கும் சிறிய இனிப்புக்கள் - சீனி சேர்க்கப்படாதது | 200 மி. கி./கி. கி. |
| | | | 3. அதிக சுவையூட்டிய தொண்டையைப் புத்துயிர்ப்புடன் வைக்கும் பஸ்டிலஸ் - சீனி சேர்க்கப்படாதது | 65 மி. கி./கி. கி |
| | | | 4. கொக்கோ அல்லது உலர்ந்த பழங்கள் அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல் லது சீனி சேர்க்கப்படாதது | 65 மி. கி. /கி. கி. |
| | | | 5. மாப்பொருளை அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது | 65 மி. கி./கி. கி |
| | | | 6. சீனி சேர்க்கப்படாத சுவிங்கம் | 250 மி. கி/கி. கி |
| | | | 7. சக்தி குறைக்கப்பட்ட குளிசை வடிவமான இனிப்புப் பண்டம் | 15. மி. கி/கி. கி |
| | | | நானாவித உணவு | |
| *25.* | *961* | நியோடேம் | 1. சிற்றுண்டிகள் : உடன் உண்ணக்கூடிய, முன்னரே கொள் கலனில் அடைக்கப்பட்ட, உலர்ந்த காரமான மாப் பொருள் உற்பத்திகள் மற்றும் பூச்சிடப்பட்ட விதைகள் | 18 மி. கி/கி. கி. |
| | | | 2. ஐஸ்கிறீமிற்கான கோர்னும் வேபர்ஸ்சும் - சீனி சேர்க்கப் படாதது | 60 மி. கி./கி. கி. |
| | | | 3. கொக்கோ, பால், உலர்ந்த பழம் அல்லது கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சான்விச் தடவுபசை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 32 மி. கி./கி. கி<br>26 மி. கி./கி. கி |
| | | | 4. உண்ணத்தகு ஐஸ் வகை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 32 மி. கி./கி. கி. |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

(ஒழுங்குவிதிகள் 3 (1) , 3 (2)

| இல. | நிரல் I<br>ஐ. என். எஸ். | நிரல் II<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | நிரல் IV<br>பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | | | 5. தகரத்தில் அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட பழம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 32. மி. கி./கி. கி |
| | | | 6. சக்தி குறைக்கப்பட்ட ஜாம். ஜெலி மற்றும் மாமலேட்ஸ் | 32 மி. கி./கி. கி. |
| | | | 7. சக்தி குறைக்கப்பட்ட பழம் மற்றும் காய்கறித் தயாரிப்புகள் | 10 மி. கி./கி. கி. |
| | | | 8. பழங்கள் மற்றும் காய்கறிகளின் இனிப்பு - புளிப்பு பாதுகாப்பு பதார்த்தம் | 10 மி. கி./கி. கி. |
| | | | 9. மீன், சுவையூட்டிய மீன், நண்டு, சிப்பி உயிரினங்கள் முழுமையாக அல்லது அரைவாசியாக பாதுகாக்கும் இனிப்பு - புளிப்பு பதார்த்தம் | 5 மி. கி./கி. கி. |
| | | | 10. சக்தி குறைக்கப்பட்ட சூப்புகள் | 12 மி. கி./கி. கி. |
| | | | 11. சோஸ் | 12 மி. கி./கி. கி. |
| | | | 12. கடுகு கிறீம் | 55 மி. கி./கி. கி. |
| | | | 13. விசேட போசனை பயன்பாட்டிற்காக மென்மையான பேக்கறி உற்பத்திகள் | 26 மி. கி./கி. கி. |
| | | | 14. உடல் நிறையைக் குறைப்பதற்காக திட்டமிட்ட உணவுகளில் பயன்பாட்டுக்காக சக்தி மட்டுப்படுத்தப்பட்ட உணவுகள் | 32 மி. கி./கி. கி |
| | | | 15. விசேட மருத்துவ நோக்கங்களுக்காக திட்டமிட்ட உணவுகள் | 20 மி. கி./கி. கி |
| | | | 16. திரவ வடிவில் விநியோகிக்கப்படும் உணவுக் குறை நிரப்பிகள் | 60 மி. கி./கி. கி |
| | | | 17. திண்ம வடிவில் விநியோகிக்கப்படும் உணவுக் குறை நிரப்பிகள் | 185 மி. கி./கி. கி |
| | | | 18. விற்றமின்கள் அத்துடன் அல்லது கனியுப்புக்களை கொண்ட சிரப் வகை அல்லது மெல்லக்கூடிய வடிவத்தில் விநியோகிக்கப்படுவதுமான உணவுக் குறைநிரப்பிகள் | பொருத்தமான அளவு |
| | | | 19. மேசை இனிப்பூட்டிகள் | |
| | | மதுசாரமற்ற பானங்கள் | | |
| 26. | 950 | அசிசல்பேம் K | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட பானங்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 350 மி. கி./கி. கி |
| | | | 2. பழச்சாறை அடிப்படையாகக் கொண்ட பானங்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 350 மி. கி./கி. கி |
| | | சாப்பாட்டின் பின் உணவுகளும் அவற்றை ஒத்த உணவுகளும் | | |
| 27. | 950 | அசிசல்பேம் K | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட சாப்பாட்டின் பின் உணவு - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 350 மி. கி./கி. கி |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

*(ஒழுங்குவிதிகள் 3 (1) , 3 (2)*

| இல. | நிரல் I<br>ஐ. என். எஸ். | நிரல் II<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | நிரல் IV<br>பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | | | 2. பாலும் பாலிலிருந்து பெறப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 350 மி. கி./கி. கி |
| | | | 3. பழங்களையும் மரக்கறிகளையும் அடிப்படையாகக் கொண்ட சாப்பாட்டின் பின் உணவுகள் - சக்தி குறைக் கப்பட்டது அல்லது சீனீ சேர்க்கப்படாதது | 350 மி. கி./கி. கி |
| | | | 4. முட்டையை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க் கப்படாதது | 350 மி. கி./கி. கி |
| | | | 5. தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 350 மி. கி./கி. கி |
| | | | 6. கொழும்பை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க் கப்படாதது | 350 மி. கி./கி. கி |
| | இனிப்புப் பண்டங்கள் | | | |
| 28. | 950 | அசிசல்பேம் K | 1. சீனி சேர்க்கப்படாத இனிப்புப் பண்டங்கள் | 500 மி. கி./கி. கி |
| | | | 2. கொக்கோ அல்லது உலர்ந்த பழங்கள் அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது | 500 மி. கி./கி. கி |
| | | | 3. மாப்பொருளை அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது | 1000 மி. கி./கி. கி |
| | | | 4. சீனி சேர்க்கப்படாத சுவிங்கம் | 2000 மி. கி./கி. கி |
| | நானாவித உணவு | | | |
| 29 | 950 | அசிசல்பேம் K | 1. சிற்றுண்டிகள் : உடன் உண்ணக்கூடிய, முன்னரே கொள் கலனில் அடைக்கப்பட்ட, உலர்ந்த காரமான மாப் பொருள் உற்பத்திகள் மற்றும் பூச்சிடப்பட்ட விதைகள் | 350 மி. கி./கி. கி |
| | | | 2. தகரத்தில் அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட பழம் - சக்தி குறைப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 350 மி. கி./கி. கி<br>1000 மி. கி./கி. கி |
| | | | 3. சக்தி குறைக்கப்பட்ட ஜாம், ஜெலி மற்றும் மாமலேட்ஸ் | |
| | | | 4. சக்தி குறைக்கப்பட்ட பழம் மற்றும் காய்கறித் தயாரிப்பு கள் | 350 மி. கி./கி. கி |
| | மதுசாரமற்ற பானங்கள் | | | |
| 30. | 951 | அஸ்பாட்ரேம் | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுலையூட்டப்பட்ட பானங்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 600 மி. கி./லீற்றர் |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

*(ஒழுங்குவிதிகள் 3 (1) , 3 (2)*

| இல. | நிரல் I<br>ஐ. என். எஸ். | நிரல் II<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | நிரல் IV<br>பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | | | 2. பழச்சாறுகளை அடிப்படையாகக் கொண்ட பானங்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 600 மி. கி./லீற்றர் |
| | **சாப்பாட்டின் பின் உணவுகளும் அவற்றை ஒத்த உணவுகளும்** | | | |
| *31.* | *951* | *அஸ்பாட்ரேம்* | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட சாப்பாட்டின் பின் உணவு - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 1000 மி. கி./கி. கி |
| | | | 2. பாலும் பாலிலிருந்து பெறப்பட்டவற்றை அடிப்படை யாகக் கொண்ட தயாரிப்புக்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 1000 மி. கி./கி. கி |
| | | | 3. பழங்களையும் மரக்கறிகளையும் அடிப்படையாகக் கொண்ட சாப்பாட்டின் பின் உணவுகள் - சக்தி குறைக் கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது. | 1000 மி. கி./கி. கி |
| | | | 4. முட்டையை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 1000 மி. கி./கி. கி |
| | | | 5. தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது | 1000 மி. கி./கி. கி |
| | | | 6. கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது | 1000 மி. கி./கி. கி |
| | | **இனிப்புப் பண்டங்கள்** | | |
| *32.* | *951* | *அஸ்பாட்ரேம்* | 1. சீனி சேர்க்கப்படாத இனிப்புப் பணடங்கள் | 1000 மி. கி./கி. கி |
| | | | 2. கொக்கோ அல்லது உலர்ந்த பழங்கள் அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 2000 மி. கி./கி. கி |
| | | | 3. மாப்பொருளை அடிப்படயாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது. | 2000 மி. கி./கி. கி |
| | | | 4. சீனி சேர்க்கப்படாத சுவிங்கம் | 5500 மி. கி./கி. கி |
| | **நானாவித உணவு** | | | |
| *33.* | *951* | *அஸ்பாட்ரேம்* | 1. சிற்றுண்டிகள் : உடன் உண்ணக்கூடிய, முன்னரே கொள் கலனில் அடைக்கப்பட்ட, உலர்ந்த காரமான மாப் பொருள் உற்பத்திகள் மற்றும் பூச்சிடப்பட்ட விதைகள் | 500 மி. கி./கி. கி |
| | | | 2. தகரத்தில் அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட பழம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 1000 மி. கி./கி. கி |
| | | | 3. சக்தி குறைக்கப்பட்ட ஜாம், ஜெலி மற்றும் மாமலேட்ஸ் | 1000 மி. கி./கி. கி |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

(ஒழுங்குவிதிகள் *3 (1) , 3 (2)*)

| இல. | நிரல் I<br>ஐ. என். எஸ். | நிரல் II<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | நிரல் IV<br>பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | | | 4. சக்தி குறைக்கப்பட்ட பழம் மற்றும் காய்கறித் தயாரிப்புகள் | 1000 மி. கி./கி. கி |
| | | | **மதுசாரமற்ற பானங்கள்** | |
| 34. | 955 | சுக்கிரலோஸ் | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட பானங்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 300 மி. கி./லீற்றர் |
| | | | 2. பாலும் பாலிலிருந்து பெறப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 300 மி. கி./லீற்றர் |
| | | | **சாப்பாட்டின்பின் உணவுகளும் அவற்றை ஒத்த உணவுகளும்** | |
| 35. | 955 | சுக்கிரலோஸ் | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட சாப்பாட்டின் பின் உணவு - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 400 மி. கி./கி. கி |
| | | | 2. பாலும் பாலிலிருந்து பெறப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக்கள் சக்தி - குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 400 மி. கி./கி. கி |
| | | | 3. பழங்களையும் மரக்கறிகளையும் அடிப்படையாகக் கொண்ட சாப்பாட்டின் பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 400 மி. கி./கி. கி |
| | | | 4. முட்டையை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள்- சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 400 மி. கி./கி. கி |
| | | | 5. தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 400 மி. கி./கி. கி |
| | | | 6. 15 சதவீதத்திற்கு (%) மேலான நார்ப்பொருளையும் 20 சதவீத (%) தவிட்டையும் கொண்டுள்ள காலை உணவுத் தானியங்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 400 மி. கி./கி. கி |
| | | | 7. கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேரக்கப்படாதது | 400 மி. கி./கி. கி |
| | | | 8. உண்ணத்தகு ஐஸ் வகை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 320 மி. கி./கி. கி |
| | | | **இனிப்புப் பண்டங்கள்** | |
| 36. | 955 | சுக்கிரலோஸ் | 1. சீனி சேர்க்கப்படாத இனிப்புப் பண்டங்கள் | 1000 மி. கி./கி. கி. |
| | | | 2. சுவாசத்திற்கு புத்துணர்வளிக்கும் சிறிய இனிப்புக்கள்- சீனி சேர்க்கப்படாதது | 2400 மி. கி./கி. கி. |
| | | | 3. அதிக சுவையூட்டிய தொண்டையை புத்துயிர்ப்புடன் வைக்கும் பஸ்டிலஸ் - சீனி சேர்க்கப்படாதது | 1000 மி. கி./கி. கி. |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

*(ஒழுங்குவிதிகள் 3 (1) , 3 (2)*

| *இல.* | *நிரல் I* ஐ. என். எஸ். | *நிரல் II* அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | *நிரல் III* அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | *நிரல் IV* பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | | | 4. சக்தி குறைக்கப்பட்ட குளிசை வடிவமான இனிப்புப் பண்டம் | 200 மி. கி./கி. கி. |
| | | | 5. கொக்கோ அல்லது உலர்ந்த பழங்கள் அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 800 மி. கி./கி. கி. |
| | | | 6. மாப்பொருளை அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது | 1000 மி. கி./கி. கி. |
| | | | 7. சீனி சேர்க்கப்படாத சுவிங்கம் | 3000 மி. கி./கி. கி. |
| | | | **நானாவித உணவு** | |
| 37. | 955 | சுக்கிரலோஸ் | 1. சிற்றுண்டிகள் : உடன் உண்ணக்கூடிய, முன்னரே கொள் கலனில் அடைக்கப்பட்ட, உலர்ந்த காரமான மாப்பொருள் உற்பத்திகள் மற்றும் பூச்சிடப்பட்ட விதைகள் | 200 மி. கி./கி. கி. |
| | | | 2. ஐஸ்கிறீமிற்கான (கோர்னும் வேபர்ஸ்சும் - சீனி சேர்க்கப் படாதது) | 800 மி. கி./கி. கி. |
| | | | 3. கொக்கோ, பால், உலர்ந்த பழம் அல்லது கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சான்விச் தடவுபசை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 400 மி. கி./கி. கி. |
| | | | 4. தகரத்தில் அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட பழம்- சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 400 மி. கி./கி. கி. |
| | | | 5. சக்தி குறைக்கப்பட்ட ஜாம், ஜெலி மற்றும் மாமலேட்ஸ் | 400 மி. கி./கி. கி. |
| | | | 6. சக்தி குறைக்கப்பட்ட பழம் மற்றும் காய்கறித் தயாரிப்புகள் | 400 மி. கி./கி. கி. |
| | | | 7. பழங்கள் மற்றும் காய்கறிகளை பாதுகாக்கும் இனிப்பு - பதார்த்தம் | 180 மி. கி./கி. கி. |
| | | | 8. சோஸ் | 450 மி. கி./கி. கி. |
| | | | 9. சக்தி குறைக்கப்பட்ட சூப்புகள் | 45 மி. கி./கி. கி. |
| | | | 10. கடுகு கிறீம் | 140 மி. கி./கி. கி. |
| | | | 11. மென்மையான பேக்கரி உற்பத்திகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 700 மி. கி./கி. கி. |
| | | | **மதுசாரமற்ற பானங்கள்** | |
| 38. | 954 | சக்கரினும் அதனது சோடியம் பொற்றாசியம் மற்றும் கல்சியம் உப்புக்களும் | நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட பானங்கள்- சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது (காபன் ஏற்றப்பட்டது அல்லது காபனேற்றப்படாதது) | 80 மி. கி./லீற்றர் |
| | | | **சாப்பாட்டின்பின் உணவுகளும் அவற்றை ஒத்த உணவுகளும்** | |
| 39. | 954 | சக்கரினும் அதனது சோடியம்பொற்றாசியம் மற்றும் கல்சியம் உப்புக்களும் | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட சாப் பாட்டின் பின் உணவு - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 100 மி. கி./கி. கி. |
| | | | 2. பழங்களையும் மரக்கறிகளையும் அடிப்படையாகக் கொண்ட சாப்பாட்டின் பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 100 மி. கி./கி. கி. |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

(ஒழுங்குவிதிகள் *3 (1), 3 (2)*

| இல. | நிரல் I<br>ஐ. என். எஸ். | நிரல் II<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | நிரல் IV<br>பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | | | 3. முட்டையை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 100 மி. கி./கி. கி. |
| | | | 4. தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 100 மி. கி./கி. கி. |
| | | | 5. கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க் கப்படாதது | 100 மி. கி./கி. கி. |
| | | | இனிப்புப் பண்டங்கள் | |
| 40. | 954 | சக்கரினும் அதனது சோடியம்பொற்றா சியம் மற்றும் கல்சியம் உப்புக்களும் | 1. சீனி சேர்க்கப்படாத இனிப்புப் பண்டங்கள் | 500 மி. கி./கி. கி. |
| | | | 2. கொக்கோ அல்லது உலர்ந்த பழங்கள் அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம்- சக்தி குறைக்கப் பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 500 மி. கி./கி. கி. |
| | | | 3. மாப்பொருளை அடிப்படையாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப் படாதது | 300 மி. கி./கி. கி. |
| | | | நானாவித உணவு | |
| 41. | 954 | சுக்கரினும் அதனது சோடியம்பொற்றாசியம் மற்றும் கல்சியம் உப்புக் களும் | 1. சிற்றுண்டிகள் : உடன் உண்ணக்கூடிய, முன்னரே கொள் கலனில் அடைக்கப்பட்ட, உலர்ந்த காரமான மாப் பொருள் உற்பத்திகள் மற்றும் பூச்சிடப்பட்ட விதைகள் | 100 மி. கி./கி. கி. |
| | | | 2. தகரத்தில் அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட பழம் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 200 மி. கி./கி. கி. |
| | | | 3. சக்தி குறைக்கப்பட்ட ஜாம், ஜெலி மற்றும் மாமலேட்ஸ் | 200 மி. கி./கி. கி. |
| | | | 4. சக்தி குறைக்கப்பட்ட பழம் மற்றும் காய்கறித் தயாரிப்புகள் | 200 மி. கி./கி. கி. |
| | | | மதுசாரமற்ற பானங்கள் | |
| 42. | 960 | ஸ்டீவியோல் கிளைகோசைட் | 1. சுவையூட்டப்பட்ட பானங்கள் (காபனீர்ஒக்சைட் ஏற்றப் பட்ட அல்லது காபனீர்ஒக்சைட் ஏற்றப்படாத) பானங்கள்- சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 80 மி. கி./லீற்றர்* |
| | | | 2. சுவையூட்டப்பட்ட நொதித்த பாலை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புகள் அத்துடன் வெப்பமூட்டித் தயா ரிக்கப்பட்ட பால் உற்பத்திகளும் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 100 மி. கி./லீற்றர்* |
| | | | 3. அற்ககோல் அற்ற பியர் | 70 மி. கி./லீற்றர்* |
| | | | சாப்பாட்டின்பின் உணவுகளும் அவற்றை ஒத்த உணவுகளும் | |
| 43. | 960 | ஸ்டீவியோல் கிளைகோசைட் | 1. நீரை அடிப்படையாகக் கொண்ட சுவையூட்டப்பட்ட சாப் பாட்டின் பின் உணவு - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 100 மி. கி./கி. கி.* |
| | | | 2. முட்டையை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க் கப்படாதது | 100 மி. கி./கி. கி.* |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

*(ஒழுங்குவிதிகள் 3 (1), 3 (2)*

| இல. | நிரல் I ஐ. என். எஸ். | நிரல் II அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | நிரல் III அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | நிரல் IV பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | | | 3. தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 100 மி. கி./கி. கி.* |
| | | | 4. 15 சதவீதத்திற்கு (%) மேலான நார்ப்பொருளையும் 20 சதவீத (%) தவிட்டையும் கொண்டுள்ள காலை உணவுத் தானியங்கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க் கப்படாதது | 330 மி. கி./கி. கி.* |
| | | | 5. கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சாப்பிட்ட பின் உணவுகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க் கப்படாதது | 100 மி. கி./கி. கி.* |
| | இனிப்புப் பண்டங்கள் | | | |
| 44. | 960 | ஸ்டீவியோல் கிளைகோசைட் | 1. சீனி சேர்க்கப்படாத இனிப்புப் பண்டங்கள் | 350 மி. கி./கி. கி.* |
| | | | 2. சுவாசத்திற்கு புத்துணர்வளிக்கும் சிறிய இனிப்புக்கள்- சீனி சேர்க்கப்படாதது | 2000 மி. கி./கி. கி.* |
| | | | 3. அதிக சுவையூட்டிய தொண்டையை புத்துயிர்ப்புடன் வைக்கும் பஸ்டிலஸ்- சீனி சேர்க்கப்படாதது | 670 மி. கி./கி. கி.* |
| | | | 4. கொக்கோ அல்லது உலர்ந்த பழங்கள் அடிப்படை யாகக் கொண்ட இனிப்புப் பண்டம் - சக்தி குறைக்கப் பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 270 மி. கி./கி. கி.* |
| | | | 5. கொக்கோவும், சொக்கலேட்டு உற்பத்திகளும் | 200 மி. கி./கி. கி.* |
| | | | 6. சீனி சேர்க்கப்படாத சுவிங்கம் | 3300 மி. கி./கி. கி.* |
| | | | 7. அலங்காரங்கள், மேற்பூச்சி, நிரப்பிகள், பழத்தை அடிப்படையாகக் கொண்ட நிரப்பிகள், தீன்பண்டங்கள் மட்டும் - சீனி சேர்க்கப்படாதது | 330 மி. கி./கி. கி.* |
| | | | 8. அலங்காரங்கள், மேற்பூச்சி, நிரப்பிகள், பழத்தை அடிப் படையாகக் கொண்ட நிரப்பிகள் தவிர கொக்கோ, உலர்த் திய பழத்திலானாவை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 270 மி. கி./கி. கி.* |
| | நானாவித உணவுகள் | | | |
| 45. | 960 | ஸ்டீவியோல் கிளைகோசைட் | 1. உருளைக்கிழங்கு, தானியங்கள், மாவு, மா பண்டத்திலான சிற்றுண்டிகள் | 20 மி. கி./கி. கி. * |
| | | | 2. பதனிடப்பட்ட விதைகள் | 20 மி. கி./கி. கி. * |
| | | | 3. கொக்கோ, பால், உலர்ந்த பழம் அல்லது கொழுப்பை அல்லது கொழுப்பை அடிப்படையாகக் கொண்ட சான் விச் தடவுபசை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 330 மி. கி./கி. கி. * |
| | | | 4. உலர்ந்த பழத்திலான சன்விச் தடவும்பசை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 200 மி. கி./கி. கி. * |
| | | | 5. உண்ணத்தகு ஐஸ் வகை - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 200 மி. கி./கி. கி. * |
| | | | 6. ஜெம், ஜெலி, மாமலேட்டுகள் சுவையூட்டப்பட்ட செஸ்நட் பியூரி - சீனி சேர்க்கப்படாதது | 200 மி. கி./கி. கி. * |
| | | | 7. பழம், மரக்கறி தயாரிப்புகள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனி சேர்க்கப்படாதது | 200 மி. கி./கி. கி. * |
| | | | 8. பழப்பாணி, மரக்கறி பாணி அதனையொத்த தயாரிப்பு கள் - சக்தி குறைக்கப்பட்டது அல்லது சீனிசேர்க்கப்படாதது | 100 மி. கி./கி. கி. * |

அட்டவணை (தொடர்ச்சி)

(ஒழுங்குவிதி 5)

| இல. | நிரல் I<br>ஐ. என். எஸ். | நிரல் II<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டி | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட இனிப்பூட்டிகள் பாவிக்கப்படக்கூடிய உணவுகள் | நிரல் IV<br>பாவிக்கக்கூடிய அதிகபட்ச அளவு |
|---|---|---|---|---|
| | | | 9. பழம் மற்றும் மரக்கறிகளின் இனிப்பு - புளிப்பு பதனிடும் பதார்த்தம் | 100 மி. கி./கி. கி. * |
| | | | 10. பாதுகாக்கப்பட்ட, அரைவாசி பாதுகாக்கப்பட்ட மீன், ஊறவைத்த மீன், நண்டு, சிப்பி உயிரினங்களை பதனிடும் இனிப்பு - புளிப்பு பதார்த்தம் | 200 மி. கி./கி. கி. * |
| | | | 11. சூப்புகள், மெல்லிய மீன், இறைச்சி சூப் - சக்தி குறைக்கப் பட்டது | 40 மி. கி./கி. கி. * |
| | | | 12. (நொதித்த, நொதிக்காத) சோயா சோஸ்கள் | 175 மி. கி./லீ. * |
| | | | 13. வேறு சோஸ் வகைகள் (நொதித்த, நொதிக்காத) | 120 மி. கி./லீ. * |
| | | | 14. நிறையை குறைப்பதற்காக சக்தி மட்டுப்படுத்தப்பட்ட திட்டமிடப்பட்ட உணவுகளின் பயன்பாட்டிற்கென கருதப் பட்ட உணவுகள் | 270 மி. கி./கி. கி. * |
| | | | 15. விசேட மருத்துவ நோக்கங்களுக்காக திட்டமிடப்பட்ட உணவுகள் | 330 மி. கி./கி. கி. * |
| | | | 16. திரவ வடிவில் விநியோகிக்கப்படும் உணவு குறைநிரப்பி கள் | 200 மி. கி./கி. கி. * |
| | | | 17. மாத்திரைகள், கரல்கள், வேறு வடிவிலான திண்ம உணவு குறைநிரப்பிகள் | 670 மி. கி./கி. கி. * |
| | | | 18. சுவிங்கம் அல்லது பாணி வகையான உணவு குறைநிரப் பிகள் | 1800 மி. கி./கி. கி. * |
| | | | 19. மேசை இனிப்பூட்டிகள் | *பொருத்தமான அளவு |

குறிப்பு 1: *சமநிலை ஸ்டிவியோல்

அட்டவணை II

(ஒழுங்குவிதி 8)

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | ஸ்டீவியோல் கிளைகோசைட் | மாறும் காரணி |
| 1. | ஸ்டிவியோல் | 1.00 |
| 2. | ஸ்டிவியோசைட் | 0.40 |
| 3. | றிபோடியோசைட் A | 0.33 |
| 4. | றிபோடியோசைட் B | 0.40 |
| 5. | றிபோடியோசைட் C | 0.33 |
| 6. | றிபோடியோசைட் D | 0.28 |
| 7. | றிபோடியோசைட் F | 0.34 |
| 8. | டல்கோசைட் A | 0.40 |
| 9. | றுபுசோசைட் | 0.50 |
| 10. | ஸ்டிவியுயோபயோசைட் | 0.50 |

*அட்டவணை III*

(ஒழுங்குவிதி 9)

1. ஸ்ரிவியோ சமன்பாட்டின் கணிப்பீடு

[SE]= CFx [SG ]

இவ்விடத்தில்,

CF = அட்டவணை II இன் I ஆம் நிரலில் ஸ்டீவியோல் கிளைகோசைட்க்கு நேரொத்ததற்கு அட்டவணை II இன் II ஆம் நிரலில் நிரலிடப்பட்டவாறாக நிரைப்படி

[SG] ஒவ்வொரு ஸ்டீவியோல் கிளைக்குோசைட்களுக்காக அடர்ந்த கரைசல்
[SE] சமநிலை ஸ்டிவியோல்க்கான அடர்ந்த கரைசல்

2. ஸ்ரிவியோ சமன்பாட்டின் கணிப்பீட்டிற்கான உதாரணங்கள்

2.1 தனி கிளைகோசையிட்டுக்கான சமநிலை ஸ்ரிவியோலுக்கான கணிப்புக்கான உதாரணம் :

றிபோடியோசயிட் B யின் 100 mg/kg இன் தயாரிப்பு ஒன்று 100 x 0.40 = சமநிலை ஸ்ரிவியோல் 40 mg/kg

2.2 கிளைகோசையின் கலவைக்கான சமநிலை ஸ்ரிவியோலுக்கான கணிப்புக்கான உதாரணம் :

90% ஸ்வியோசையிட் 5% றிபோடியோசையிட் B மற்றும் றிபோடியோசையிட் A யின் கலவையின் 100 mg/kg உள்ளடக்குகின்ற தயாரிப்பொன்றிற்கான சமநிலை ஸ்ரிவியோல் பின்வருமாறு :-

$[(0.9 \times 0.40) + (0.05 \times 0.40) + (0.05 \times 0.33)] \times 100$ mg/kg = 39.65 mg/ kg

**2.3 ஸ்ரிவியோல் கிளைகோசையிட் தயாரிப்பொன்றிற்கான அனுமதிக்கப்படும் ஆகக்கூடியதிற்கான கணிப்பிற்கான உதாரணம்**:
உணவொன்றில் அனுமதி 160 mg/ kg ஆக உள்ளவிடத்து 90% ஸ்ரிவியோல், 5% றிபோடியோசையிட் B மற்றும் றிபோடியோசைட் A உள்ளடக்கியுள்ள ஸ்ரிவியோல் கிளைக்கோசையிட் ஒன்றின் ஆகக்கூடிய அனுமதிக்கப்படும் மட்டத்தைக் கணிக்க.

இந்த தயாரிப்புக்கென சமநிலையை தீர்மானிக்க.

$[(0.90 \times (160/0.40)] + (0.05 \times (160/0.40)] + (0.05 \times (160/0.33))] = 404$ mg/ kg

3 - 859

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.